புதினப்பத்திரிகையாக பதிவுசெய்யப்பெற்றது.

# இந்துசாதனம்.

ஸ்தாபிதம் (1889) வெளியீடு ௨.௫. மாசனை இ.

| பத்திரக் கிரயம். | | |
|---|---|---|
| யாழ்ப்பாணப் பட்டினம்: ஆ 1-க்கு | ரூ. | 5-00 |
| இலங்கை, இந்தியா: ,, | ரூ. | 8-00 |
| தொலைவாய்ப்பகுதி: ,, | ரூ. | 9.00 |
| தனிப்பிரதி: | | சதம் 5 |

முற்பணம் அனுப்புவோருக்கே பத்திரிகை அனுப்பப்படும்.

## THE HINDU ORGAN

சோமவாரத்திலும், குருவாரத்திலும் பிரசுரமாகும்.

"எனைத்தானு நல்லவைகேட்க வனைத்தானு, மான்ற பெருமை தரும்,"

| விளம்பர விகிதம். | | |
|---|---|---|
| முதன்முறைக்கு:—ஒருகலம் | ரூ. | 9-00 |
| ,, அரைக்கலம் | ரூ. | 4-50 |
| ,, காற்கலம் | ரூ. | 3-00 |

அடுத்த முறைகட்கு டெ. விகிதங்களிற் பாதி.
விளம்பரங்கள் முற்பண மனுப்பினலன்றிக் கவனிக்கப்படா

புத்தகம்—சஉ. } யாழ்ப்பாணம்;-பிரமோதூதவூல ஆடிமீ ௨0௳, (1930 ஆகஸ்டு 4) திங்கட்கிழமை. { இலக்கம்—க0.


உ
கணபதி துணை.

சீர்பூத்த கருவிநூ லுணர்ச்சி தேங்கச்
சிவம்பூத்த நிகமாக மங்க வோங்கப்
பார்பூத்த புறச்சமய இருள்க ணீங்கப்
பரம்பூத்த சைவநிலை பாரோர் தாங்கப்
பேர்பூத்த சிவானந்தத் தினிது துங்கப்
பிறைபூத்த சடைமவுலிப் பிரானூர் தந்த
வார்பூத்த வறிவிச்சை தொழிலென்றோது
மதம்பூத்தவிநாயகன்றாள் வணங்கிவாழ்வாம்.

வாழ்க அந்தணர் வானவரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

---

ஸ்ரீ கதிர்காமம்
கதிரமலைத் தண்ணீர்ப்பந்தர்த்
திருப்பணித் தர்ம இயல்பு.

கதிரைமலை கடுமலையி லுள்ள முத்து மாணிக்க விநாயகப் பெருமான் உத்தரவு பெற்று வருஷா வருஷம் பக்தகோடி அடியார்கள் பொருளுதவியால் நடத்தேறிவருகிற ஷெ தண்ணீர்ப்பந்தல் மேன்மேலும் நடத்தேறி வருவதற்குப் பெரும் பொருள் வேண்டும்.

கனதனவான்களாகிய சகல புண்ணியசீலர்களும் தங்கள் தங்களால் இயன்றளவு உதவும் பணம் அனுப்பும் விபரம்:—

யாழ்ப்பாணம் தீவுப்பற்று மணியம் வேலணை ஸ்ரீ மு. சோமசுந்தரம்பிள்ளை அவர்களிடம் அனுப்பவும்.

முத்துமாணிக்க வேல்சாமி சீடனுகிய
சி. வீரவாகுப்பிள்ளை குமாரன்
வீ. ஆ. துரைசுவாமிப் பரதேசியார்,
கதிரமலை.

(Y. 66. 31-12-30.)

---

## சாலாமிஸ்திரி லேகியம்.

இந்த லேகியத்தை யான் அநேக பிரபுக்களுக்குச் செய்து கொடுத்துப் பல வியாதிகளைக் குணப்படுத்தியதால் அவர்கள் மனமகிழ்ந்து வெகுமதிகளையும் கொடுத்திருக்கிறார்கள். இதை நான் விளம்பரத்தில் உலகனன்மைக்காகப் பிரசுரித்திருக்கிறேன். ஆனால் பிரபுக்கள் மாத்திரமல்ல ஏழைகளும் இதனாலுண்டாகுஞ் சுகத்தை அடையும்படி பொதுஜன நலத்தைக்கருதியே இப்போதுஇந்த லேகியத்தைப்பற்றிப் பிரசுரித்து வருகிறேன்.

இது சாலாமிஸ்திரி, குங்குமப்பூ, சிலாஜித், கஸ்தூரி, குமாஸ்தாகா, பிதாரூ, சாலாமுஸ்லி, சப்பேமுத்ஸ்லி, பிஸ்தாலை, சார்ப்பருப்பு, பாதம்பருப்பு, சாத்தாவாரி, நீர்முள்ளிவிதை, நாகப்பூ வங்கபஸ்பம், அப்ரக்பஸ்பம், பவளப்பஸ்பம், வெள்ளிபஸ்பம், அயகாந்த செந்தூரம் சாம்பிராணிப் பதங்கம் இன்னும் அநேக புஷ்டியான மூலிகைவகைகள் சேர்த்துச் செய்யப் பெற்றிருக்கின்றது.

இதனுல் நீர்கிழிவு, நீர்க்கடுப்பு, நீரடைப்பு, மூலச்சூடு, ஒருவருஷத்துள் உண்டாயிருக்கும் பக்கவாய்வு, இருமல், காசம் பித்தகாமாலை, பித்தபாண்டு, பீனிசம், கைகால் காந்தல், வலி, இடுப்புவலி, பக்கவாய்வு இன்னும் அநேக கடுமையான வியாதிகள் தீரும். ஸ்திரீகள் இந்த லேகியத்தைச் சாப்பிட்டுவந்தால், மேற்சொல்லிய வியாதிகள் சுகமடைவதுடன் சூதக வாய்வு, பிரசவ அறையில் உண்டாகும் ரோகங்கள் தீர்ந்து தேகபுஷ்டியும் பலமும் பெறுவார்கள். பால் விருத்தியாகும்.

இந்த லேகியத்தின் விலை ருத்தல் ஒன்றுக்கு ரூபா ௨0. அரைருத்தலுக்கு ரூபா க0. கால் ருத்தலுக்கு ரூபா ௫. தபாற்செலவு பிரத்தியேகம்.

சிங்கப்பூர் பினாங்கு முதலிய தொலைவாசிராச்சியப்பகுதிக்கு வீ. பீ. சட்டம் இல்லாததினால் முன்பணம் ஆடர் அனுப்புதல் வேண்டும்.

இங்ஙனம்,
க. ஆறுமுகம்பிள்ளை,
சிவஞான ஆரோக்கியசுகாதாரவைத்தியசாலை
சாத்தான்குடி போஸ்டு,
மட்டக்களப்பு,
சிலோன்.

(Y.75. 31-12-30.)

---

## யாழ்ப்பாணம் ஐக்கியலாபநிதி.

வங்கிக்காரர்

1918-ம் ஆ ஸ்தாபிதமானது — மூலநிதி 8 லட்சம் ரூபா..
இதுவரையிற் கொடுபட்ட பங்குப்பணம் ரூபா 1,64,706
100 ரூபா விகிதமான 8000 பங்குகள்.

### பங்குப்பணங் கட்டுமுறை.

பங்கொன்று 1 ரூபா விகிதமாக 75 மாசகாலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்தகாலமுடிவில் பங்கொன்றுக்கு ரூ. 100 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்நேரமும் வாங்கலாம்.

### தினசரிப் பற்றுவரவு.

எச்சமிநி சராசரி 500 ரூபாவிற்குக் குறையாமல் இருக்குமானுல் 3 விகித வட்டியுடன் தினசரிப்பற்றுவரவு செய்யலாம்.

### தவணைவரையறுக்கப்பட்ட க்ஷேமப்பணம்.

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 12 மாசம் என்னுங் காலங்கள் வரையறுத்து ஏற்கப்படும். வட்டியும் முறையே 3 விகிதம், 4 விகிதம், 6 விகிதமாகக் கொடுக்கப்படும்

### உண்டியல்கள்.

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும், "இம்பீரியல்" வங்கியிலும். இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்கவிதமாகக் கொடுக்கப்படும். தொலைவாய்ராச்சியப்பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.
**இந்தியகோட்டு வட்டத்திற்கு மாற்றிக்கொடுக்கப்படும்.**

### கடன்

நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். மாசந்தோறும் கட்டுபவர்களுக்கு 10 விகிதமான வட்டியும் ஏனையோர்க்கு 12 விகிதமான வட்டியும் விதிக்கப்படும். (ஈடுவைத்தவர்கள்) முதலையும் பாகம்பாகமாகக் கொடுக்கலாம்.

காணி, தானியங்கள், சில முதலாம் பழுதுபடாத பொருள்களையும் ஈடாகவைத்துக் கொண்டு தக்க பிணையுடன் கடன் எடுக்கலாம் (இந்தக்கடனையும் பாகம் பாகமாகக் கட்டித் தீர்க்கலாகும்.)


இன்னும் வேண்டிய விபரங்களை மானேசர் மூலமாக அறிந்துகொள்ளலாம்.

(Y. 72. 21-8-30.)

---


## The "New Lanka" Roadster Chromium Plated Bicycle.

கவனிக்கத்தகுந்த குறிப்புகள்.



1. கைபிடிக்கம்பி குரோமியம் பூசப்பட்டது
2. ஆசனத்தின் வில்லுக்களும் குரோமியம் பூசப்பட்டது.
3. சட்டம் உறுதியாய் இணைத்த உருக்கு.
4. சேறுதாங்கி மிகவும் கனமானது.
5. பிறேக்குகள் திருத்தமான முறையாக உள்ளன.
6. வளையங்களும் குரோமியம் பூசப்பட்டவை.
7. கம்பிகள் நெருப்புக்குஉருகக்கூடாத பளிங்குப்பூச்சுப் பூசப்பட்டவை.
8. சங்கிலி "ஹான்ஸ் றினோல்ட்." கம்பனியினுடையது.
9. சில்லுக்கூடங்கள் மிக்ககனதியான $1\frac{1}{4}$ இஞ்சு பிரமாணமான குண்டுகளைக் கொண்டவை
10. சில்லுத்தாங்கி முட்டைவளைவுள்ளதும், குரோமியம் பூசப்பட்டதுமாய்த்திருத்தமான முறையாகவும் உள்ளது.

### சைகிலுக்கு ரூபா 75.

அல்லது

தவணையிலே முதல் மாசம் 10 ரூபாயும், பின்னர்
10 மாசங்களுக்கு மாசந்தோறும் 7 ரூபா 16 சதமும்.

**SUB-AGENTS:-**

M. A. Sinna Lebbe Bros., Batticaloa.
T. N. Lingam, Vannarponnai, Jaffna
R. M. C. de Silva, Main Street, Ambalangoda
Jayanoris Silva & Sugathadasa, Trincomalee.
National Drapery Stores, Anuradhapura.
L. N. de Silva, Matara.

SOLE AGENTS:
**Colombo Stores Ltd.**
P. O. BOX 197. —— COLOMBO.

(Y. 74, 19 6-30 to 18 12 30)


---


## இன்னும் முதன்மை ஸ்தானமே!

கோவுத் தைலங்க ளென்று சொல்லி "டஜன்" கணக்காய்க் கேள்விப்படுகிறீர்கள். ஆனுல் நோவைத் தீர்ப்பதிற் சிறந்தது என்று சொல்லக் கூடியது.

### லிட்டில் ஓரியென்டல் பாம்

தைலம்தான்.

43வருடங்களாய் உண்மையான அனுபோகத்தில் உசிதமாய் நின்று தலைவலி, நரம்புவலி, சில்வாய்வு, நுடைப்பிடிப்பு, வாதம், சுளுக்கு தொண்டைநோ, நெஞ்சுச்சளி முதலியவைகளுக்கு
நிச்சயமான
சுறுக்கான
தீங்கில்லாத
தைலம்
என்று ரூபிக்கப்பெற்றது.

எல்லா ஷாப்புகளிலுங் கிடைக்கும்

(4—28) Little's Oriental Balm and Pharmaceutics Ltd., Madras

(Y. 51 31-12-30)

# இந்துசாதனம்.

யாழ்ப்பாணம்: பிரமோதூதஹு ஆடிமீ ௨0௨ திங்கட்கிழமை.




## கதிர்காம யாத்திரை.

மாணிக்க நிறைகங்கை யாடியுன் னைப்பணிய
வந்திடும் பூதலத் தோர்
வாயுமர்பாடவுங் குருடர்கண் பார்த்திடவும்
மலடிகள்பின் மைந்தர் பெறவுங்
காணிந்த மாரவே லாவென்னு மன்பரைக்
காடிபுலி யானை சிங்கங்
காலிற் பணிந்தஞ்சி யோடவுங் கந்தனே
கண்கண்ட தெய்வ மெனவே
யாணிப்பொன்முத்திமண்டபமேவுகச்சியினுன்
அடியேனை யாண்டு கொண்டேன்
ஆகத்தில் வந்தபிணி தீர்ந்திடவு முன்னிந்து
மாறுமுக மெய்த் தெய்வமே
சேணிற்புலோமசைவளர்த்தபெண்பிடிகணவ
செங்கீரை யாடி யருளே
தேவரோடுமவிதர்பணிகதிர்காமவேலனே
செங்கீரை யாடியருளே.

எங்கள் கதிர்காமவேலர்க்கு மகோற்சவம் நிகழும்பட்சம் இதுவாதலால் மாணிக்க கங்கையில் மூழ்கி கதிரையாண்டவரைத் தரிசித்துத் தத்தம் தீவினைகளையெல்லாம் அறவே யகற்றி ஈடேறும் வண்ணம் இந்த யாழ்ப்பாணத்திலும் இலங்கையின் ஏனைய பாகங்களிலுமிருந்து இலட்சக் கணக்கான அன்பர்கள் புகையிரதம், மோட்டரதம், பஸ், வண்டி, மரக்கலம் முதலியவை மூலமாகவும் நடந்தும் பிரயாணஞ் செய்கின்றார்கள். கதிர்காமத்தையனுக்குக் காவடியெடுத்துக்கொண்டு செல்வோர் பலர். சைவ நன்மக்கள் மாத்திரமல்லர் பௌத்தர்கள் இஸ்லாமானவர்களும் பன்னூற்றுக் கணக்கானோர் கலியுக வரதனைத் தும்பிடும்படி அவனுடே அவன் சந்நிதிக்குச் செல்லுகிறார்கள். இலங்கைவாசிகள் மாத்திரமல்லர், இந்தியாவிலும் காசிதொடக்கம் கன்னியாகுமரியீறாகப் பல அன்பர்கள் இந்த ஆடிமாச உற்சவத்தைத் தரிசிக்கும்படி இப்புண்ணிய க்ஷேத்திரத்திற்கு வருவர்.

இந்த யாழ்ப்பாணத்தில் நூற்றுக்கு 25 விதமானோர் இப்பொழுது கதிர்காம யாத்திரை புறப்பட்டுவிட்டார்கள். ஆனால் கதிர்காம யாத்திரை செய்யாது இங்கேதானே தங்கியிருக்கும் அன்பர்களுடைய பூதவுடம்பு மாத்திரம் யாழ்ப்பாணத்திற் சஞ்சாரஞ்செய்ய, அவர்கள் மனமானது அக் கதிர்காமத்திற்குப் போய் மாணிக்க கங்கையெனப்படும் புண்ணிய தீர்த்தத்தில் மூழ்கிப் புனிதத்தோடு கூடிய தாய்க் கதிரமலைப் பெருமானின் சந்நிதானத்திலும் பெருமான் கோவிலின் திருவீதியிலுஞ் சஞ்சரிக்கின்றது. இந்த மானுடயாக்கை யெடுத்தபின் ஒரு முறையேனும் கதிர்காம புண்ணிய க்ஷேத்திரத்திற் சென்று மாணிக்ககங்கையில் ஸ்நானம் செய்து கதிர்காம வேலரைத் தரிசிக்கும் பாக்கியம் பெற்றுவிட்டால், பின்னர் இந்த மகோற்சவ புண்ணிய காலத்தில் இடவுடம்பு எங்கே சஞ்சரித்தாலும் மனமானது எவருக்கும் உணர்த்தாமல கதிர்காம ஸ்தலத்திற்குப் பறந்துபோய், கதிர்வேற்பெருமான் திருவருளிற் றிளைத்துக் கிடக்கும். ஆதலால் ஒரு முறையேனும் கதிர்வேற் பண்ணவனை நேரிற்சென்று தரிசித்துவிட்டால் மிக விசேடமாகும். அப்பனே, கதிரமலை ஐயனே, நீ செய்யும் அற்புதத்தை இடபுன்னுவாற் பணனுதல் முடியாதே.

### கதிர்காமமும் அக்பார் நீதியரசரும்.

ஜூலைமீ 27உ ஞாயிற்றுக்கிழமை வடமராட்சி இந்து வித்தியாசங்கத்தாரின் வேண்டுகோட் கிணங்கி, அக்பார் நீதியாசர் பருத்தித்துறை ரேகுப் பண்டக சாலையில் பல சனசமூகத்தில் ஆங்கிலத்தில் ஒரு சிறந்த உபந்நியாசஞ் செய்ய அதனை, சுப்பிறீங்கோட்டுத் துவிபாஷகராகிய ஸ்ரீ C. ஆறுமுகமவர்கள் உடனுக்குடன் மொழி பெயர்த்துச் சனங்களுக்கு வெளியிட்டார். அக்பார் நீதியாசர் செய்த குறித்த பிரசங்க சாரமோ மிக மேலானதென மெச்சிப் பாராட்டத் தக்கது. அச்சமையத்தில், இஸ்லாம மதத்தினரான நீதியாசர் கதிர்காம க்ஷேத்திரத்தைப் பற்றியும் கொழும்புத்துறை யோகர் சுவாமிகளைப்பற்றியும் சொல்லியவைகளை மாத்திரம் இங்கே மொழி பெயர்த்துத் தருகின்றோம்.

"...... மேலும் இந்த இலங்கையிலே புண்ணியக்ஷேத்திரங்களெல்லாவற்றுள்ளும் சிறந்த புண்ணியக்ஷேத்திரமாகிய கதிர்காமம் இருக்கிறது. அந்தப் புண்ணிய தலத்திற்கு நான் இரண்டுமுறை போயிருக்கிறேன். அங்கு நானடைந்த மனச்சாந்தியையும் மேலான அநுபவத்தையும் நான் ஒருபோதும் மறக்கமாட்டேன்; இன்னமும் ஒருமுறையாயினும் அந்தக் கதிர்காம தலத்திற்குப் போவேனோ என்று என்மனம் ஏங்கலிக்கிறது. ஆனால் என்ன செய்யலாம் போய்க்கொள்வதற்கு எனக்கு இப்பொழுது நேரமில்லை. நீதியாசனம் அங்கேதான் இருக்கிறது. சந்தனம் விட்டகலப் பெற்றவரும் என்றும் ஆநந்தத்தோடு கூடிய வருமாகிய யோகர்சுவாமிகளும் இப்பொழுது கதிர்காமயாத்திரை போயிருக்கிறார்களென்றறியலானேன். இலங்கையே ஒருசிறந்த நாடு; அதிலும் யாழ்ப்பாணம் இன்னுஞ் சிறந்ததாகும். யாழ்ப்பாணத்துத் தமிழ்மக்களாகிய உங்களின் மேலானநிலைமையைக் காணும்போதெல்லாம் என்மனம் பொறாமைகொள்ளுகின்றது. ஒருமகான் உங்கள் மத்தியிலிருப்பதாகிய பாக்கியம் உங்களுக்குத்தானுண்டு. நான் இங்கே மகான் என்று கூறியது யோகர்சுவாமிகளை, யாழ்ப்பாணத்தவர்களாகிய உங்களைப்பற்றி நினைக்கும்போது என்மனதில் பொறாமையெழுகின்றது. யோகர்சுவாமி பொறாமை பெரும் பாவமாகும் என்று உங்களுக்குப் பலமுறைகளிற் போதித்திருப்பார். ஆனால் நான் உங்கள்மீதுகொள்ளும் பொறாமை பாவமாக மாட்டாது. ஏனென்றால் நான்கொள்ளும் இந்தப்பொறாமை உங்களை மேலும் மேலும் நன்னிலையை ஆவாவச் செய்கிறது ......... உங்கள் மத்தியில் யோகர்சுவாமியிருக்கிறார் அதனால் உங்கள் நாடு சுத்தமுடையது; நீங் கரும்பாக்கியவான்களாவீர்கள்; அந்தமகானுடைய தோற்றமும் கவிந்திரரகிய ரவீந்திரநாததாகூரின் தோற்றமும் அதிகமாக ஒத்திருக்கின்றன. யோகர்சுவாமிகளைத் தம்மை நான் புகழ்ந்துபேசுவது விருப்பமாயிருக்கமாட்டாது. அவர் புகழை விரும்புவதில்லை. தமது ஞானத்தையும் ஒழுக்கத்தையும் உங்களுக்குஉதவும்படி அந்தமகானுபவரை வேண்டுங்கள்; அவரிடத்தில் இவைகளையெல்லாம் நீங்கள் வேண்டிப் பெற்றுக் கொள்ளுதற்கான காலஞ் சமீபித்துவிட்டது.

[அக்பார் நீதியரசர் வடமராட்சியில் ஆங்கிலத்திற் செய்த இவ்வுபந்நியாசம் முழுவதையும் அடுத்த பிரசுரத்தில் மொழிபெயர்த்து வெளியிடுவோம். ப=ர்.]

### மநுதர்மசாஸ்திரம்.

முதல் அத்தியாயம்.

[வண்ணை: வை. இ.]

(சென்ற சோமவாரத் தொடர்ச்சி.)

காலத்தின் கணக்கையறிதல்.

அந்தப்பிரமாவினுடையவும் மற்றவர்களுடையவும் கருமாநுஷ்டானங்களைப் பகுத்தறிவதற்காக இந்தச் சாஸ்திரத்தை யோனிவாய்ப்பட்டுப் பிறவாத சுவாயம்புமநு பிரசித்தப்படுத்தினர்.

இந்தச் சாஸ்திரத்தின் பயனையறிந்த பிராமணனாலே முயற்சியுடன் இந்தச் சாஸ்திரம் ஓதத்தக்கது. சிடர்களுக்கும் நியமமாய் ஓதுவிக்கத்தக்கது. மற்றவருணத்தான் இதை ஓதுவிக்கக் கூடாது.

விரதாநுஷ்டானங்களுடன் இந்தச் சாஸ்திரத்தை ஓதுகின்ற பிராமணன் மனோவாக்குக்காயங்களின் உண்டாகும் பாவங்களோடு ஒருபோதும் சேருகிறதில்லை.

இந்தச் சாஸ்திரத்தை ஓதுகின்ற பிராமணன் ஒருவனுமிருந்தபோதிலும் தன் பந்தியிலிருக்கும் யாவரையும் பரிசுத்தப் படுத்துகின்றான். தன் வம்சத்திலுள்ள முன்னேழு பின்னேழு சந்ததியாரையும் ரக்ஷிக்கின்றான். அவன் இந்தப் பூமிமுழுவதையுந் தானம் வாங்க யோக்கியனாகின்றான்.

இந்தச்சாஸ்திரம் ஓதுகின்றவர்களுக்கு மங்களத்தையும், புத்தியையும், கீர்த்தியையும், ஆயுளையும், மேலான மோக்ஷத்தையும் உண்டுபண்ணுகின்றது.

இந்தச் சாஸ்திரத்தில் எல்லாத் தருமங்களும், கர்மங்களின் குணதோஷங்களும், நான்குவருணத்தாருக்கும் தொன்றுதொட்டு வந்த ஒழுக்கங்களும் சொல்லியிருக்கின்றது.

வேதத்திலும், ஸ்மிருதியிலும் சொல்லப்பட்ட ஆசாரமே எல்லோருக்கும் முக்கிய தருமமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகையால் தான் சுகமடைய இச்சையுடையவன் இந்தச்சாஸ்திரத்தில் முயற்சியுள்ளவனாக இருக்கவேண்டியது.

ஒழுக்கத்தை விட்ட பிராமணனுக்கு வேதத்திற்சொல்லிய பலன்கிடைப்பதில்லை. ஒழுக்கமுடைய பிராமணனுக்குச் சகல பலனும் குறைவின்றிக் கிடைக்கும்.

முனிவர்கள் ஒழுக்கத்தினாலே தருமத்தின் பலனையறிந்து, எல்லாத்தத்துவத்திற்கும் ஒழுக்கத்தையே முதற்காரணமாகச் சொல்லுகின்றார்கள்.

### ஆப்தர் வாக்கியங்கள்.

—:o*o:—

மஹாத்மாகாந்தி வெளியிட்டவை.

நமது அரசினர் பிரஜைகளாகிய எங்களைக் கலகம் பண்ணத் தூண்டுகின்றார்கள்; இல்லையேல் அடக்கி ஆள விரும்புகின்றார்கள். நாங்கள் இந்த இரண்டிற்கும் இடங்கொடுக்கக் கூடாது. அவர்கள் எங்களைச் சுட்டாலும் நாங்கள் சாத்துவிக எதிர்ப்பையே கைக்கொள்ளவேண்டும்.

ஃ ஃ ஃ

எங்கள் பக்கத்திலுள்ளாரிடத்துக் காணப்படும் முரட்டுத் தனத்தை அடக்கிக்கொள்வதிலேயே எங்கள் சுவய ராச்சியம் தங்கியிருக்கிறது.

ஃ ஃ ஃ

சாத்துவிக எதிர்ப்பொன்றே நாங்கள் இப்பொழுது கைக்கொள்ளத்தக்கது. இத்தமுறை கல் மனசினையும் உருகச் செய்யும்.

ஃ ஃ ஃ

நம்மையாளும் ஆங்கிலருள் ஒவ்வொருவரும் தாம் யந்திரத் துப்பாக்கியின்பின் நிற்கும்போது எவ்வளவு அரணோடு கூடியிருக்கின்றார்களோ எவ்வளவு பதனமாயிருக்கின்றார்களோ அவ்வளவு அரணோடும் பதனத்தோடும் அவர்கள் இந்தியாவில் எந்த மூலையிலும் பயமின்றிச் சஞ்சாரஞ்செய்யலாமென்பதை நாங்கள் எங்கள் செய்கையாலும் நடையாலும் ஆங்கிலேயருக்குக் காட்டிவைத்தல் வேண்டும்.

ஃ ஃ ஃ

சனங்களோடு தன்னிஷ்டமா யூடாடுதல், தாம் மனதில் உண்மையென்று நினைத்ததை உள்ளபடியே பிறருக்குப் போதித்தல், பத்திரவாயிலாகவும் புத்தகவாயிலாகவும் வெளியிடுதலாகிய இந்த ஆரம்ப உரிமைகளை எங்கள் அரசினரிடமிருந்து நாம் பெற்றுக்கொள்ளும் நோக்கமாகவே இந்தச் சாத்துவிக எதிர்ப்பும் ஒத்துழையாமையும் எம்மாற் றொடங்கப்பெற்றன.

ஃ ஃ ஃ

ஒரு சத்தியாக்கிரகியேனும் அவனது கூட்டத்தினனேனும் சாத்துவிக எதிர்ப்பை விடுத்து முரட்டுத்தனத்தைக் கைக்கொள்வானாயின் அவன் செய்த குற்றத்துக்குச் சாந்தியில்லையென அறியக்கடவன்.

ஃ ஃ ஃ

அரசினருடைய கிரமப்படுத்தப்பட்ட முரட்டுச் செயல்களை எதிர்த்தல் என்னால் முடியாதானால் சனங்களின் கிரமப்படுத்தப்படாத முரட்டுச் செயல்களை எதிர்த்தலும் என்னால் முடியாது. ஆனதால் இந்த இரு முரட்டுத்தனங்கட்குமிடையே அகப்பட்டு நசிந்து போவதற்கு நான் சித்தமுள்ளவனாயிருக்கிறேன்.

ஃ ஃ ஃ

ஒத்துழையாமை, சமய சம்பந்தமான ஒழுக்கத்தோடு கூடிய முயற்சியானலும் அரசினரைப் புறக்கணிக்க வல்லது; ஆனதினாற்றான் ஒத்துழையாமை இந்திய அரசினருடைய பிரமாணங்களின்படி ராசத்துவேஷமானதென மதிக்கப்படுகின்றது (வரும்.)

### காலநிலை.

சென்ற மூன்று மாசங்களாக இங்கே மழையில்லை வெளலாம். வெய்யில் அகோரம் தாங்குதற்கரியது. இராக் காலங்களில் இடையிடையே கடுங்காற்று வீசுகின்றது.

### "தீப்பாய்தல்"

சலசபத்திற்கு வடக்கே 15மைல் தூரத்தில் இருக்கும் உடப்பு நகரில் பல வருடங்களாக திரௌபதி அம்மன் கோவிலிற் திருவிழா நடைபெற்று வருகின்றது. தற்போது ஆடிமீ 12உ (27-7-30)ல் ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றி 18நாட்கள் திருவிழா நடைபெறும் பதினெட்டா நாளாகிய ஆடிமீ 29உ (13-8-30ல் புதன்கிழமை சாயந்தரம் 5மணியளவில் ஆயிரக்கணக்கான சனங்கள் பக்தியுடன் தீயிலிறங்கிச் செல்வார்கள். இத்திருவிழாவைப் பார்ப்பதனிமித்தம் பலவூர்களிலிருந்தும் பெருந்தொகையான சனங்கள் வருவார்கள் கடிதம்.

### கந்தபுராணமும் சோதிடபரிபாலினியும்.

—:※○※:—

புராணங்கள் மந்த மதியினர் பொருட்டுச் செய்யப்பட்டன என்றும், அதற்றன், கந்தபுராணமு மொன்றென்றும், தம் நூல்களை, காமத்திலே மிழ்வுக்களிப்புறம் முற்கால அரசர் முன்னிலையில் அரங்கேற்றும் பொருட்டுச், காமச்சுவை அமைந்த பாடல்களைத் தாம் விரும்பாமலும் தம் நூல்களினிடையிடையே புலவர்களிற் சிலர் சேர்த்துப் பாடினார்களென்றும், அவருள் கந்தபுராணகாரருமொருவரென்றும், கொக்கோக நூலின் கருத்தமைந்த இந்திரபுரிப்படலத்தைக் கச்சியப்ப சிவாசாரியர் பாடியது தவறென்றும், இக்காலத்துப் பாமரசனங்களும் பிழையென்று சொல்லத்தக்கதாகப் பூமி தட்டையென்று கூறியதும், கிரகதார அளவைகளையும், நட்சத்திரதார அளவைகளையும், சோதிட நூல்களுக்கு மாறுகக் கூறியதும் பிழையென்றும், சோதிடபரிபாலினி கூறுகின்றது. அது பொருத்தமா? என்பது கண்டு ஆராயத்தக்கது.

க-வது. புராணங்கள் மந்தமதியினர் பொருட்டுச் செய்யப்பட்டவென்பது ஆராயத்தக்கது. சிவஞானசித்தி உரையிலே, சிவஞான முனிவர் உலகிலுள்ள மக்கள், பிராகிருதர் என்றும், வைதிகர்என்றும், சாமுசித்தர் என்றும், மூவகைப் படுவரென்றும் சாமுசித்தர் நூல்வேண்டாது முத்தி புகுவரென்றும், பிராகிருதர் நூலைவிரும்பாராதலின் அவர்க்கும் நூல் வேண்டாமென்றும், இடையிலுள்ள வைதிகரே நூலை விரும்புவாராதலின் அவர்க்கே நூல்களுரியவென்றுங் கூறுகின்றார்.

பண்டைநற்றவத்தாற்றோன்றிப்
பாமலைப்பத்திபண்ணுந்
தொண்டரைத்தானேதூய கதியினிற்
றொகுப்பன்மார்க்கர்
கண்டநூலோதிவீடுகாதலிப்
பவர்கட்கீசன்
புண்டரிகத்தாள்சேரும்பரிசி
னைப்புகலுநூற்றும்.

என்னும் சித்தியாருரை நோக்குக. அம்முறைப்படி பார்க்குமிடத்து வைதிகரே நூல் வேண்டுபவராதலின், அவரை மந்தமதியினர் என்றுபத்ராதிபர் கூறுவது எவ்வாறு பொருந்தும்? மந்தமதியினர்க்கு நூலே அவரறிவிற் புகமாட்டாது. அவர் அதை விரும்பவும் மாட்டார். ஆதலின் மந்தமதியினர்க்கு மேற்பட்ட அறிவுள்ள வைதிகரே நூல்களை விரும்புவோரென்பது திண்ணம். ஆகவே, நூலை விரும்பும் அறிவுடைய வைதிகரை இவர் மந்தமதியினர் என்றது பொருத்தமில் கூற்றாம். வைதிகருக்கும் அவர் அவர் பக்குவத்துக்கேற்ப நூலுரைக்கப்படும். அதுபற்றியே கந்தபுராணகாரரும், கந்தபுராணத்தைக் கேட்கவிரும்பிய முனிவர்களை நோக்கி,

"மன்னவன்மதலையாசான்
மாமகன் தனதமைச்சன்
பன்னுசொற்கொள்வோர்வோன்
வழிபடுபண்பின்மிக்கோன்
என்றுமிக்கிவர்கட்கீவ
தேனைநூல் உங்கள்போலச்
செந்நெறியொழுகுவார்க்கே
செப்புக புராணமுற்றும்."

என்று கூறினர். ஆதலின், புராணங்களும் வீட்டைவிரும்பி நல்வழியிலொழுகும் அறிவுடையவர்களுக்கே சொல்லப்படுவன என்பது பிரசித்தமாம். ஞான மாத்திரமே கூறும் நூல்களை விரும்பிய அறிஞரைநோக்க இவர்களும் மந்தமதியினர் தாமே எனின்; அப்பருப்புப் பக்குவமுறையிலடங்குமன்றி, மந்தமதியிலடங்கமாட்டாது; மந்தமதியினராகிய உலகர் நூலையே விரும்பாராதலின், அவர்களும் மந்தமதியினர் தாமெனின், செந்நெறியொழுகிய சாற்பத்தென்னுயிர முனிவர்களும் மந்தமதியினர் எனப்படுக் குற்றமாம். ஆதலின், புராணங்கள் மந்தமதியினர் பொருட்டுக் கூறப்பட்டன எனக் கூறியதும் பொருந்தமில் கூற்றுதல் காண்க.

கந்தபுராணத்திலே, சமயஞானங்களும் அவற்றின் மறுப்புக்களும் உண்மைச் சமயம் இது எனபதும், முழுமுதல் இவர் என்பதும் காசிபனுபதேசப்படலம், ததீசியுத்தரப்படலம் முதலியவற்றுற் கூறப்படுதலின், அது மந்தமதியின் மேற்பட்ட மதியினர்க்கே உரியதாதலுங் காண்க, பாசமயிகளுடைய விளக்கள்களெல்லாம் விடையிறுத்து சமது சமய உண்மையைக் காட்டுவது இது அன்றோ? ஆதலால் இக் கந்தபுராணம் வேத முதலிய கலைகளைப்போல அறிஞர் போற்றத் தக்கதொன்றேயாம். அன்றியும் மந்தமதியினராகிய அறிவிலிகள் இருக்குமிடத்தில்புராணங்களைப்படிக்கப்படாதென்று;

"அறியார் நீக்கமி செய்யுமிடத்திலும்
அறிவிலானர் ஆதாம் மாக்கினும்
உறவில்லைஞ்சியருண்டாட்டிடத்திலும்
பொறியிலானர் பொருந்தயிடத்திலும்"

"கம்பமால்கரிக்கிறுங் கண்ணகனிம்பர்காடு முழுவதுமியிறும்,
செம்பொன்மாரி பொழியினுஞ் செஞ்சடைக்கம்பன்காதை பகர்தல் கவித்திடார்"

என்று பிரமோத்தர காண்டம் கூறுதல் காண்க. (வரும்.)

—ஈழகேசரி.

## அனுராசபுரம் விவேகானந்த சபையின் 5-ம் ஆண்டு நிறைவுவிழாக் கொண்டாட்டம்.

சென்ற பிரமோதூத ஆண்டு ஆடித் திங்கள் 4-ம் திகதி (19-7-30) சனிக்கிழமை பிற்பகல் 4 தொடக்கம் அனுராசபுரம் விவேகானந்த சபையின் 5-ம் ஆண்டு நிறைவு விழாக் கொண்டாட்டம் அச்சபையின் மண்டபத்தில் திரு வே இராமசாமி, வழக்கறிஞர், அவர்களின் தலைமையின் கீழ் மிகச் சிறப்பாக நடைபெற்றது. அத்தருணம் உயர் திரு விபுலானந்த சுவாமிகளும், திரு M S இராசரத்தினம், வழக்கறிஞர், அவர்களுஞ் சமுகமளித்தனர்.

சென்ற ஆண்டு அறிக்கைப் பத்திரம் வசித்த பின் அவைத் தலைவர் சபையின் வளர்ச்சியைப் பற்றியும் தன் முன்னேற்றத்தைப்பற்றியுமோர் சிறந்த சொற்பொழிவு செய்தனர். அதன் பின் சிற்றுண்டி முதலியன சபையிலுள்ளார்க்கு வழங்கப்பட்டன. மாலை 6½ மணியளவில் உயர் திரு. விபுலானந்த சுவாமிகளின் தலைமையின் கீழ் திரு M. S இராசரத்தினம் அவர்கள் "பெரியபுராணத்தின் தேசீயச்சிறப்பு" என்னும் பொருள்பற்றி நுணுகிய ஆராய்ச்சியுடன் சிறந்த சொற்பொழிவு நிகழ்த்தினர். அத்துடன் அன்றையக் கொண்டாட்டம் நிறைவு பெற்றது. மறுநாள் மாலை 6½ மணிக்கு உயர் திரு விபுலானந்த சுவாமிகள் "தீ வை" என்னும் பொருள்பற்றி ஒரு அரும் பெரும் சொற்பொழிவு செய்தார்கள்.

சுடித.

## தந்திச் செய்திகள்.

லண்டன் 2-8-30

சக்கிரவர்த்தியார் ஆங்கிலேயப் பாராளுமன்றத்தை ஒக்டோபர் 28-ந் திகதி வரையில் கூடாது இருக்கும்படி நிறுத்திவைத்திருக்கின்றனர். அப்போது சக்கரவர்த்தியார் வட்ட மேசைச் சமாஜங் கூடும்பொழுது ஆங்கிலேயப் பிரதிநிதிகளும், இந்தியப் பிரதிநிதிகளும் பரஸ்பர நம்பிக்கையுடனும் சிநேகபாவத்துடனும் ஒத்துழைப்பார்களென்றும், அச்சமாசத்திற் கூடும் ஒவ்வொரு அங்கத்தினரும், தமது இந்தியக் குடிசனங்களின் முன்னேற்றத்தையே கண்ணோக்கமாகக் கொள்வரெனத் தாம் பெரிதும் விரும்புவதாகவும் கூறினர்.

பம்பாய் 2-8-30.

பண்டித மதனமோகன மாளவையாவும், ஹனசாமேதா தேவியுமாக நடத்திச்சென்ற ஊர்வலத்தைப் பொலீசார் மறித்துக்கொள்ள ஊர்வலம் அவ்விடத்திலேயே நின்றுகொண்டது பின் பொலீஸ் தலைவர், வல்லபைப் படேலைக் கிட்டிப்போய் இந்த ஊர்வலத்தை நிறுத்திவிட வேண்டுமென்றும், தவறினால் தலைவர்கள் கைதுசெய்யப்படுவரென்றும் சொன்னார். வல்லபைப்படேல் ஏனைய தலைவர்களுடன் அலவளாவி, ஊர்வலத்தைக் கலைப்பதை விட்டு தம்மையே கைதியாக்கும்படி விடுத்தனர்.

(1) பண்டித மதனமோகன மாளவையா

(2) வல்லபைப்படேல்

(3) T A K சேர்வனி
(சட்டசபை அங்கத்தவர்.)

(4) ஜெயருங்தாஸ் டவுல்றாம்
("யெளவன இந்தியா" பத்திராதிபர்.)

(5) டக்டர் ஹரிக்கார்

(6) லலா மதுராதாஸ் கிரியுஞ்சி

ஆகிய ஆறு தலைவர்களும் கைதுசெய்யப்பட்டு பொலீஸ் மோட்டார்வண்டியில் ஏறினர்.

பின்பு ஊர்வலக்காரர்மீது கம்புப்பிரயோகம் பொலிசார் நடாத்தினர் 100 தொண்டர்கட்குமேல் காயமடைந்தவர்.

சட்டவிரோதமான கூட்டத்திற் பங்கு பற்றியதாக பண்டிதமதனமோகனமாளவையாவும் வல்லபைப்படேலும் குற்றஞ்சாட்டப்பட்டு விசாரிக்கப்பெறுவார்களாம்.

பம்பாய் 1-8-30

ஜெயக்கார் மஹாத்மாவுடன் 1½ மணி நேரம் வரையிற் கலந்து பேசினரென்றும் இப்போது சிறையிடப்பட்டிருக்கும் தலைவர்களைச் சந்திக்கப்பண்ணுவதற்கு இராசப்பிரதிநிதியின் தீர்மானத்தை எதிர்ப்பார்த்திருப்பதாகவும் தெரிவித்தனர்

## எங்கே போகலாம்?

நமது யாழ்ப்பாணவாசிகள் அரிசிகுத்தும் ஆலைகளினுதவியால் அநேக சுகங்களை அநுபவிக்கின்றனர். எங்கள் கிராமவாசிகள் இந்தச் சுகங்களைத் தாராளமாய் அநுபவித்தற்கு எங்கே போகலாம்.


சுன்னாகத்து அன்னபூரணி அரிசி ஆலைக்கே போகலாம்? அது தன் வாயிலாகத் தானியங்களைக் குத்தியும் தவிடாக்கியுந் தருகின்றது.

இன்னும் அது அரிசி, நெல், தவிடு விற்பனையுஞ் செய்கின்றது. ஆதலால் நாமும் சுன்னாகம் அன்னபூரணி அரிசி ஆலைக்கே போய்ப் பூரணத்தைப் பெறுவோமாக.

(Q 14. 31-8-30. தி.)


## எண்ணெய்ப்பனைச் சமுதாயப் பங்குகள்.

பெருத்தலாபம் இலகுவாகப் பெறலாம்.



எண்ணெய்ப்பனையின் ஒருகுலை பழங்கள் 100 இறாத்தல் நிறையுள்ளது.

நல்ல புத்தியுடைய பணமுதவிவிப்பவருக்குள எண்ணெய்ப்பனைப்பங்குகள் ஏற்றவைகள். ஏனெனில்,

(1) பங்காளிகள் குறித்த நிலத்திற்கும் முதலாளிகளாகி அதிலுள்ள இலாபங்களுக்கும் பாத்தியத்தையுடையராகின்றனர்.

(2) பெருத்தலாபத்தை எதிர்பார்த்திருக்கலாம். இச்சமுதாயத்தாரின் சோக்கவிளம்பரம் ஸ்திரமான ஆராய்வால் கண்டுபிடிக்கப்பட்டு 100ரூ 25வீதம் லாபங்கட்டியிருக்கிறது

(3) இச்சமுதாய பரிபாலகர்கள் பங்காளிகளையும் காத்து அவர்களின் பணத்தையும் நன்கு பாதுகாக்கின்றனர்.

(4) பங்குகள் மிக்க இலகுவான தொகை தொகையாக மாதாந்தம் கொடுக்கும் நிபந்தனையில் வாங்கலாம். ஒவ்வொரு பங்கும் ரூ256 பெறுமதியாகும். விண்ணப்பத்தோடு ரூ 16-ம் பின் 30-ம் நாள் ரூ 16-ம் பின் முழுத்தொகையும் கொடுபடும் வரையில் மாதவீதம் ரூ8.

இச்சமுதாயத்தார் பரிபாலகர்களாகவும் விற்பனைக்காரர்களாகவும் கடமை செய்வர். எவ்வளவு அதிகம் எண்ணெயுண்டாக்குகிறார்களோ அவ்வளவு அதிகம் அவர்கள் பெறுவார்கள் இவ்வொழுங்கு நல்ல பரிபாலனத்தையும் அதிக லாபத்தையும் உண்டாக்கும் ஓர் தூண்டுகோலாகவிருக்கும்.

மலேயாநாட்டிலும் இலங்கையிலும் 25லட்சம் பெறுமதியான பங்குகள் விலைப்பட்டு விட்டன.

உள்ளூர்ப் பிரதிநிதியாக, மிஸ்டர் A. கண்ணுத்துரை பாக்கஸ் (ஆனைக்கோட்டை, யாழ்ப்பாணம்) இருக்கின்றனர் இச்சமுதாயத்தின் சேர்க்கைகளைப் பற்றிய சகல குறிப்புகளுமமைந்த புத்தகத்தையும அச்சடித்த விண்ணப்பப் பத்திரங்களையும் பங்கு வாங்க விரும்புபவர்களுக்கு அவர் கொடுப்பார்.

எண்ணெய்ப்பனைச்செய்கை (லிமிட்டெட்)

தலைமைக்கந்தோர்:
18, பற்றறி றோட்டு,
சிங்கப்பூர்.

இலங்கைக்கந்தோர்:
கொழும்பு இம்பீரியல்வங்கிக் கட்டிடம்,
பதிவுபெற்ற கணக்கர்கள்,
விரேசர் & றேஸ், மேற்பார்த்து;

(Mis. 23 4


## நவீன நாகரிகப் புலவர்.

நம் அத்தியற்புத அதிமதுரச் சுந்தச் செந்தமிழ்மொழியானது பல்லாண்டுகட்கு முன்னே அகத்தியர் முதலிய அறிஞர்களாலும், தமிழ்மொழிமணிகளாகிய அரசர்களாலும், சிறைப்பட்ட சங்கங்களாலும் பிறவனையாலும் உன்னதநிலையை யுற்றிருந்தது. அக்காலத்துப் பேரறிவு படைத்த பெரும் புலவர்கள் பலர் விளங்கினார்கள். காலகதியிற் றமிழ்மொழியையுந் தமிழ்ப் புலவர்களையுஞ் சன்மானித்து வளர்த்த தமிழரசர்கள் அழிந்தொழியவே நம் தமிழ்மொழியுஞ் சீர்கெடுதலை யடைவதாயிற்று. அதிலும் இக்காலத்திலோ உத்தியோகவியத்தம் எவரும் அந்நியபாஷையாகிய ஆங்கிலத்தைக் கற்கத் தலைப்படவே நம் தமிழ்மொழி அதி கேவலநிலை யடைவதாயிற்று. இக்காலத்துப் புலவர்களென்றிருப்பாரையும் அக்காலத்துப் புலவர்களென்றிருந்தாரையும் சீர்தூக்கிப் பார்ப்பின் மணற்குன்றுக்கும் மலைக்குமுள்ள வ்வளவு வித்தியாசம் புலப்படப்பெறும் ஆகவும் இக்காலத்துச் சிற்றறிவுபடைத்த சிறு புலவர்களிற் சிலர் "வற்றியவோலை கலகலக்கும்" என்னும் பழமொழிக்கிணங்கத் தம் சிற்றறிவு காரணமாக மமதையுற்று முற்காலத்தின்ன பேரறிவுபடைத்த பெரும் புலவர்களாணியற்றப்பெற்ற நூல்களிற் சொற்குற்றம், பொருட்குற்றங் காணத் தலைப்படுகின்றனர். என்னே இவரறிவின் மாட்சி!

தற்காலத்து இந்தியாவிற் சிலரா லச்சிட்டு வெளிப்படுத்தப்படும் சிலநூற்பிரதிகளில் முலை, அல்குல் முதலிய சொற்கள் பாவிக்கப்பட்ட செய்யுட்களில் அச்சொற்களுக்குப் பதிலாக இரண்டு மூன்று புள்ளிக ளிடப்பட்டிருப்பதையும், சில நூற்பிரதிகளில் அச்சொற்கள் பாவிக்கப்பட்ட செய்யுட்களுக்குப் பதிலாக அந்த விடத்தில் இலக்கத்துடன் ஒருதொகைப் புள்ளிக ளிடப்பட்டிருப்பதையுங் கண்டேன். இஃது சென்னை யரசினரின் கட்டளைப்பிரகாரஞ் செய்யப்பட்டதெனச் சிலர் கூறுகின்றனர். அரசினர் கட்டளை விதித்திருப்பினும் அதற்குத் தற்காலத்துச் சிற்றறிவுபடைத்த சிறு புலவர்களே காரணராவர். ஏறக்குறையத் தமிழ்மொழியிலுள்ள நூல்களெலாற்றிலும் இச்சொற்கள் பாவிக்கப்பட்டே யிருக்கின்றன. புலவர்களான்மாத்திரமன்றி முனிவர்களாலும், பத்திநெறி முதிர்ந்த அடியவர்களாலும் இயற்றப்பட்ட நூல்களிலும் அச்சொற்கள் பாவிக்கப்பட்டேயிருக்கின்றன. அவற்றைத் தமிழ் நூல்களுட் பரக்கக் காணலாம். ஆயினும் சில காட்டுவல்: திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் தேவாரம் "குரும்பை முலை மலர்க் குழலி" "உண்ணாமுலையுமையாளொடும்" "பட்டிகைசந்தவல்குலாள்"; திருவாசகம் "வாருறுபூண்முலையாள்பங்க"; திருக்கோவையார் "முருகுதலைச்சென்ற கூழை முடியாமுலை பொடியா"; சிவஞானசித்தியார் "எடுகரு மலர்க்குழலார் முலைத்தலைக்கே யிடைக்கே"; திருக்குறள் "படாஅ முலைமேற்றுகில்". தேவார திருவாசகமுதலிய நற்றமிழ்ப்பெருநூல்களிலெல்லாம் இச்சொற்கள் யாண்டும் பாவிக்கப்பட்டிருப்பினும் ஈண்டு மாதிரிக்காகச் சிலவே காட்டப்பட்டன.

சிறந்தவறிவும் சீரியவொழுக்கமுந் திருந்து நாகரிகமுங் கிழப்பெற்ற அக்காலத்து மேதாவியர்கட்செல்வாம் அச்சொற்கள் இடக்கர்ச் சொற்களாகப் புலப்படாதொழிய ஆங்கிலேயரான் அனுசரிக்கப்படும் நவீனநாகரீகப்பித்துவசப்பட்டு எல்லாவயவமுஞ் சிறிது சிறிதாவது தெரியும்படி உடையணிதலையும், ஆண்களும் பெண்களும் ஒருவரோடொருவர் கைகோர்த்து கட்டிப்பிடித்தும் கலந்து விளையாடலையும் நாகரீகமாக மதிக்கும் இக்காலத்துப் போலி மேதாவியர்க்கவை இடக்கர்ச்சொற்களாகப் புலப்படுதலும் வியப்புக்கிடமானதே. இன்னும் ஆன்மசேடற்றவழிமையையே இலக்காகக் கொண்ட பண்டைக்காலத்தினர்க் கவை அசங்கிதமாகத் தோற்றாததும், வயிற்றுப் பிழைப்பையே பெரும்பாலும் இலக்காகக் கொண்ட இக்காலத்தினர்க் கவை அசங்கிதமாகத் தோற்றுதலும் பெரு வியப்பிற்கிடமானதே. நிற்க,

இவர்கள் அருவருப்புச்சொல்லனவாயிற்றே அன்றிப் பொருளனவாயிற்றோவென ஆராய்ந்து பார்ப்புழி பெரும்பாலாரிற் பொருளவான அருவருப்பு கிளக்கொணாமையின் இவ்வருவருப்புச் சொல்லனவோ பொலியருவருப்பேயாதல் உய்த்துணரப்படும். இவர்களடிப்பட்ட ஆன்றோரா னியற்றப்பட்ட அப்பாக்களைச் சிதைவுபடுத்திவிடுதலினும்பார்க்க அந்நூல்களெல்லாம் பயனில் நூல்களென நிராகரித்துவிட்டு அப்படியான சொற்களைச் சேராது உலகினர்க்குச் சிறந்த நூல்கள்செய் தளித்தலன்றோ முறைமை. அஃதவர்க்குப் பெருமைபயப்பதுமாமே. இன்னும் அச்சொற்களை யொழித்தற்கட் பேரபிமானமுடையரேல் தம் மெலிவுபாராது சிருட்டிகர்த்தாவாகிய பிரமாவை நோக்கித் தவங்கிடந்து இனிமேல் சீவர் சிருட்டிக்கும்பொழுது அசங்கிதமான இவ்வயவங்களுடன் சிருட்டியாதொழியும்படி வரம் வேண்டிக்கொள்ளில் அது எல்லாவற்றிலும் விசிட்டமான உயர்வை இவர்க்களித்துவிடுமே. பெருளுன்னமட்டும் பெயரு மழியாதிருக்குமன்றோ. முலையென்னுஞ் சொல்லில் அவ்வளவாக வசங்கிதமுறுமவர்க்கு மருந்துக்கு முலைப்பால் வேண்டியிருப்பின் பாலுண்ணாரிடஞ் சென்று தற்காலத்துப் புலவர்கள் இப்படிப் புள்ளடி வைக்கும் பாலிற் கொஞ்சம் தரவேண்டுமென்றுவது, தற்காலத் தெவரும் ஆங்கிலத்தையே மதித்துக் கஞ்சிக்குப் பயறுபோட்டது போலத் தமிழுடன் ஆங்கிலச் சொற்களையுங் கலந்து பேசத் தலைப்பட்டுவிட்டபடியால் அந்த 'டொற்' பாலிற் கொஞ்சந் தரவேண்டுமென்றுவது கேட்பார்போலும். என்னே நவீன நாகரீகப் புலவர்களின் மெனட்டிகம்!

இது இவ்வளவில் நிற்கத் தற்காலத்து நவீன நாகரிகம் படைத்த புலவர்களிற் சிலர் சைவசமயிக ளெல்லாராலும் உச்சிமேற்கொண்டு போற்றப்படும் கந்தபுராணம் முதலிய சமய நூல்களெல்லாம் அசங்கிதமான பாடல்கள் பொதிந்தனவெனப் பிரசங்கிக்கவும் பத்திரிகைவாயிலாக வெளிப்படுத்தவுந் தொடங்கிக்கொண்டனர். அவர் கூற்றுக்கள் அறிஞர்க்கு நகைவிளைக்குமாயினும் உய்த்துணர்வற்ற பாமரர்கள் அவர்களெய்ப்பி லெடுபடாவண்ணம் அவரிற் சிலர் கூற்றை ஈண் டெடுத்தாராய்வாம். கந்தபுராணம் முதலிய நூல்களினைப்பகுதியும் யோகிகளாயும் ஞானிகளாயும் வைட்டிகர்களாயுமிருந்த சிவஞான முனிவர் சிவப்பிரகாசசுவாமிகள் ஆறுமுகநாவலர் முதலிய அப்பெரியார்களெவருக்கும் அசங்கிதத்தை யூட்டாதொழியவும் தற்காலத்துப் போலிப்புலவர்கட் கவை யசங்கிதத்தை யூட்டுதல் அரதனமே.

சென்ற ஆனிமாசம் உகூ-ந் திகதி வெளிப்போந்த சுகூ-ம் இலக்கச் சோதிடபரிபாலினியில் "இந்துசாதனமுங் கந்தபுராணமும்" "இந்துசாதனப்பத்திராதிபரின் சீர்கேடு" என்னும் மகுடநாமங்களின் கீழ் முறையே பத்திராதிபராலும் தம்பனை இராமுப்பிள்ளை என்பவராலும் வரையப்பட்ட இருவியாசங்கள் காணப்படுகின்றன அவ்விருவியாசகாரர்களும் இந்துசாதனப் பத்திராதிபரையும், கந்தபுராணத்தையும், ஆக்கியோனாகிய கச்சியப்பசிவாசாரியரையும் மனம்போனவாறு மறுப்பாராயினர். அவர் மறுப்புக்களையுஞ் சிறிதாராய்வல்.

(க) இராமுப்பிள்ளையவர்கள் "பிராமணர் வேளாளர்.........பள்ளர் பறையர் என்பவருடைய பிள்ளைகள் யாவரும்.........சமாசனத்திலிருந்து கல்விகற்கலாம். அது சமயவிரோதமும் அருவருப்புமல்லவென்று ஸ்ரீ சு. சிவபாதசுந்தரமவர்கள் எழுதிக்கொடுத்த வியாசத்தைத் தமது சாதனத்தில் வெளியிட்டார்.........அவ்வியாசத்தை அறிஞர்கள் கண்டித்துக்கொண்டே வருகிறார்கள். சைவசமயத்தில் வருணதருமம் ஆச்சிரமதருமம் என இருதருமங்களுள. அவற்றுள் முன்னையது வருணதருமம். இதில் அவரவர் குலாசாரத்திற்கேற்ப ஏற்றத்தாழ்வாக ஆசாரங்கள் விதிக்கப்பட்டிருத்தலை இவர் கற்றுலன்றோ உணர்வர்" என்றார். நம்மிந்துசாதனப் பத்திராதிபர் சமாசனப் பிரமாணம் என்று தொடங்கிற்றோ அன்று தொடங்கி இன்றுவரையும் அது நீதியானவோர் பிரமாணமல்ல வென்பதைத் தாம் போதிய நியாயங்களெடுத்துக் காட்டியும், எடுத்துக்காட்டுவார்க் கிடங்கொடுத்தும், கொடுக்கலாமெனக்கூறும் இதரபத்திரிகைகளை மறுத்தும் நிறுத்திவருதலை இப்பத்திரிகையை வாசிப்போரனைவரும் உணராமலிரார். ஏறக்குறைய யாழ்ப்பாணப் பத்திரிகைகளும் சமாசனப்பிரமாணத்தைப் பூரணமாய் எதிர்த்தபத்திரிகை நம் இந்துசாதனமொன்றே கூறலாம். அப்படியாகவும் இராமுப்பிள்ளையவர்கள் இப்படிக் கூறியதற்குக் காரணம் இந்துசாதனப் பத்திராதிபர்மேலுள்ள துவேஷமேயன்றிப் பிறிதில்லையென்க. இந்துசாதனத்தில் ஸ்ரீ சு. சிவபாதசுந்தரம் என்பவரால் சமாசனத்திற்குச் சாதகமாக வெளிப்படுத்தப்பட்ட விஷயத்திற் கவனஞ் செலுத்திய இவர் ஏற்கனவே அவ்வாறுகச் சோதிடபரிபாலினியில் வெளிப்படுத்தப்பட்ட விஷயத்தில் ஏன் கவனஞ் செலுத்தவில்லையோ தெரியாது. இப்போதுதான் கவனஞ் செலுத்தற்கூக்கம் பிறந்தது போலும். சிவபாதசுந்தரத்தாற் கொடுக்கப்பட்ட விஷயத்தை ஏற்றுப் பிரசுரித்தது அதற்கு மறுப்பாக இன்னொருவரெழுதிய விஷயத்தையும் ஏற்றுப் பிரசுரித்தமையால் நம்மிந்துசாதனப் பத்திராதிபரின் கருத்தெதுவாயிருத்தல் வேண்டுமென்பதைக் காய்தலுவத்தலகற்றி இனிமேலாவது இராமுப்பிள்ளையவர்கள் ஆராய்ந்து பார்ப்பாராக.

(உ) "தொல்லாசிரியர்செய்துவைத்த பிழைகளைச் சரியென்றும் ......விளங்கிக்கொண்டார்" எனவும், "ஸ்காந்தத்திலில்லாதவற்றை வருவித்துக் கச்சியப்பர் கந்தபுராணத்திற் பாடிப்படிப்பாலைக் காமமயக்கத்திற் புகச் செய்தல் அருவருப்புடையது என்று நாங்கூறி அதற்கு உதாரணமாகக் "கோடிவர் செடுவரை" என்னுஞ் செய்யுளையும் எடுத்துக் காட்டினோம்" எனவுங் கூறினர். முதல் நூல், வழி நூல் சார்புநூலென நூல் மூன்றுவகைப்படுமென்பதையும், அவற்றினிலக்கணங்கள் இவை யென்பதனையும் நம் புலவர் உணர்ந்திருப்பாராயின் இங்ஙனங் கூறியிருக்கமாட்டார். என்னை? "முன்னோர் நூலின் முடிபொருங் கொத்துப் பின்னோன் வேண்டும் விகற்பங்கூறி, அழியா மரபினது வழிநூலாகும்" என்பதேத்தாக [illegible] கச்சியப்பசிவாசாரியர் செய்துவைத்த பிழையென்னையோ? 'கோடிவர் செடுவரை" என்னும் செய்யுட் கருத்துக் காந்தத்திலில்லையாகவும் கந்தபுராணத்துப் புகுத்தியது குற்றமென்பரேல் இயைபு நோக்கி முதனூலிலில்லாததனையும் வழிநூலிற் சேர்த்துக்கொள்ளுதல் மரபாகலின் அது குற்றமன்றென்க. இயையென்னையென்பரேல் களவொழுக்கத்தை உலகினிறுகக் கருதினர்செயலை அப்பொருட்டுறையுடன் சேர்த்து முடித்தலாம் என்பர். அச் செய்யுள் காமமயக்கத்திற் புகச்செய்தல் குற்றமென்பரேல் தலைவன் தலைவியை நயந்துரைத்தல் அகப்பொருட்டுறையைத் தழுவிய

தாகவாலும், அவ்விடத்திற்கு வேண்டியதொன்ருகலாலும், ஏனை நூல்களிற் காணப்படாத பெரு நயப்புரை அச்செய்யுளிற் ரேற்றுமையாலும் அதுவுங் குற்றமன்றென விடுக்க. வள்ளியம்மையாரின் திருமணம் களவொழுக்க நெறியைத் தழுவியதென்பதே ஆன்ருேர்பலரின் கருத்தும் மென்பதைத் தணிகைப் புராணம் முதலிய நூல்களினின்றுந் தெளிவாராக. "கோடிவர் செடுவோ" என்னுஞ் செய்யுளைக் காமமயக்கத்திற் புகச் செய்யுங் குற்றமுடைத்தெனக் கூறும் நம் சுத்தஞானப்புலவர் "கண்டு கேட்டுண்டுயிர்த்துற்றறியு மைம்புலனும் ஒண்டொடி கண்ணேயுள" "தாம் வீழ்வார் மென்ருேட்டுயிலினிது கொல், தாமரைக் கண்ணுனுலகு" என்றற் ருெடக்கத்தனவாக வரும் திருக்குறட் பாக்களையும் இன்பச்சுவை சொட்டும் திருக்கோவையாரிலுள்ள வியப்புரைகளையும், தஞ்சைவாணன்கோவை முதலியவற்றில் வரும் நயப்புரைகளையும்பற்றி யாது கூறுவரோ வறியேன். புருஷார்த்தம் நான்கனுள் இன்பமு மொன்ருமென்பதையும், தலைவன்பக்தான் "எஞ்ஞான்றுங் காதலிருவர் கருத்தொருமித்தாதரவுபட்டதே" ஆம் என்பதையும், இன்பமும் இன்றியமையாமையானன்றே திருவள்ளுவ நாயனுரும் களவியல் கற்பியல் என்னு மிரியல்களையுங் கூறினர் என்பதையும் இறையனுர் பாண்டியன் வேண்டுகோட்கிரங்கி அகப்பொருணூல் செய்தளித்தன ரென்பதையும் யார்தான் மறப்பர். ஆகவே காமவின்பச்சுவை பயக்கும் பாடல்களும் காப்பியங்களிற் பயின்று வருதலே மரபாம் என்க. இதுபற்றியன்றே இலக்கண நூலாசிரியரும் பெருங்காப்பிய நிலை பேசுமிடத்து "நாற்பொருள் பயக்கும் நடை நெறித்தாகி" எனவும் "பூம்பொழி நுகர்தல் புனல்விளையாடல்......என்றின்ன புனைந்த நன்னடைத்தாகி" எனவுங் கூறுவாராயினர். இறையனுரே அகப்பொருணூல் செய்தளித்திருப்பவும் 'அப்பொருட்டு வெறு நூலில் வருதல் கூடாதென்கை பேதமையேயாம் என விடுக்க. இன்னும் இதைப்பற்றி விரிக்கிற் பெருகுமாகலின் இவ்வளவில் விடுக்கின்றேன். வேண்டிற் காட்டுவல்.

(உ) "சச்சியப்பர், கந்தசுவாமியார் மயக்கினர் என முற்பாடிவிட்டுப் பின்பு உலைப்படுமெழுகதென்ன வுருகியே" என்ற முதலையுடைய செய்யுளால் அவர் மயங்கினவரைப்போல நின்றரன்றி உண்மையாக மயக்கவில்லை யென்று விளக்கினர்" என்ருர். இப்படி ஒருகால் மயங்கினர், ஒருகால் மயங்கினரைப்போன்ருர் என்பதுதான் தத்தவார்த்தமோ? வேறுமுண்டோ? என்பதாதிய பல பிதற்றுரை வரைகின்ருர். கந்தசுவாமியார் வள்ளியம்மையார் பூர்வசென்மத்திற் செய்துகொண்ட தவப்பயனை நுகர்வித்தருள்புரிதற்கும், அவர் வாயிலாக வேதத்துள் விதிக்கப்பட்ட எண்வகை மணங்களுள் இன்பக்கலிற் சிறந்ததாகிய களவொழுக்க முறையை உலகினிலைநாட்டற்குமே மானிட வடிவங் கொண்டெழுந்தருளினர் என்பதையும் நாடகமேடையிற் ருேற்றும் நடிகன் உண்மையிற் றன் மனத்துத் தாக்கமில்லாதிருப்பவும் வேண்டிய சந்தர்ப்பத்தில் தக்கித்துப் புலம்புவதாக எவரும் நம்புமாறு நடித்தல்போல உண்மையிற் கலங்காது, கலங்கியதாக வெளிக்குக் காண்பித்தனரென்பதையும் கச்சியப்பசிவாசாரியர் தெள்ளிதிற் புலப்படுத்தியிருப்பவும் அதனை விளங்குமாற்றலில்லாத பிள்ளை மற்றெதுதான் கூறுர்.

(ச) "அலைப்படு மதியப்புத்தேள்" சுப்பிரமணியப்பெருமானுக்கும், "சலகலம் டுனல்" அப்போது கொண்டுள்ள மனுட ருபத்திற்கும் "அலைப்படுதன்மை" கலங்கல்போற் காட்டலுக்கும் ஒப்பாகும் எனபதனைப் பிள்ளையவர்கள் உணர்வாராக.

(ரு) "உண்மையான எலுமிச்சங்கன்று குருந்த மரமாய் வளருமென்ற இவரைப்போன்ற உள்ளிடு வெளியிடு என்னு மிரண்டு மில்லாத வடிவங்கள் விளங்கியிருக்குமன்றி மற்றியார் விளங்குவர்" என்ருர். இதனுல் நம் இராமுப்பிள்ளையவர்கள் சாமானிய வசனங்களைத் தானும் உள்ளவாறு விளங்கிக்கொள்ளும் ஆற்றலற்றவர் என்பது பெறப்படுகின்றது. என்னை? எலுமிச்சங் கன்றென்றெண்ணியிருக்கக் குருந்தமரமாய் வளர்ந்தவாறு அப்பத்திரிகை காலவித்தியாசத்தினுற் போலும் தன் கோலம் மாறத் தொடங்கியிருக்கிறது" என்பது இந்துசாதனப் பத்திராதிபரின் கூற்றுதலான் என்க. தோற்ற வொப்புமையாலும் நுனித்து நோக்காமையாலும் எலுமிச்சங்கன்றென்றெண்ணியிருந்ததேயன்றி உண்மையான எலுமிச்சங்கன்று மாறியதாகக் கூறப்படவில்லையே. காலவித்தியாசம் பத்திரிகை விஷயத்தெடுத்தாளப்பட்டதன்றி எலுமிச்சங்கன்று விஷயத்திலெடுத்தாளப்பட்டதன்றும் இனிப்பத்திராதிபரெழுதினும் சிலவற்றை யாராய்ந்து விஷயத்தை முடிப்பல்.

(சு) பத்திராதிபாவர்கள் "பிரிய வகுப்பைச் சேர்ந்தவர்களுட் கச்சியப்ப சிவாசாரியருமொருவரெனபதன்மையே" என்கிருர், இவர் மூர்த்திய வகுப்பினரும் பிரிய வகுப்பினரும் என்றது காமமயக்கத்தை வருவிக்கும் பாடல்களை விரும்பிப் பாடியவரும் விருப்பமில்லாதிருந்தும் மற்றையோரின்விருப்பப்பொருட்டுப் பாடியவருமாவர். இவ்விரு வகுப்பாரிற் கச்சியப்பசிவாசாரியர் பிரிய வகுப்பைச்சேர்ந்தவரென்பதற்காவது மூர்த்திய வகுப்பைச்சேர்ந்தவரென்பதற்காவது கந்தபுராணத்தில் யாதொரு பிரமாணமுங் காணப்படாதிருப்பவும் இவர் இங்ஙனங் கூறியது பயனில் கூற்றுமென விடுக்க. கச்சியப்ப சிவாசாரியர் தாம் பிரிய வகுப்பைச் சேர்ந்தவரென விவர்க்குக் கனவிற் கூறினரோ அன்றி நனவிற்கூறினரோ என்பதையாவது, வேறு அறிந்த வகையையாவது இவரேன் காட்டாது விடுத்தனரோ!

தாம் சோதிடரானமை பற்றிச் சோதிட வாயிலாக உணர்ந்தனமெனக் கூறுவரேல் அது சாலப் பொருத்தமுடைத்தாகும்.

(எ) பத்திராதிபாவர்கள் உண்மைக்கும் சோதிட சாத்திரத்திற்கும் விரோதமாகப் பூமியைத் தட்டை வடிவினதென்ற கச்சியப்ப சிவாசாரியர் அண்டகோசப் படலத்துப் பாடியமை அவர்மேற் குற்றமாம் என்பதாகக் கூறினர். அண்டகோசப்படலத்தைக் கச்சியப்ப சிவாச்சாரியர் முதனூலாகியகாந்தத்திற்கூறியபடியே பாடினரன்றித் தமது சித்தாந்தமாகப் பாடினரல்லராதலால் அஃதவர்மேற் குற்றமாவதி யாண்டையதென விடுக்க. மேல் காந்தத்துக் குற்றமென்பரேல் காந்தத்து மாத்திரமன்றிச் சுப்பிரமணியர் வாக்காகக் கருதப்படும் சிவதருமோத்திர முதலிய வாகமங்களினும் அவ்வாறே கூறப்படுகின்றமையால் அதுவுமடாதென விடுக்க. வேறென்னை யெனிற் சிருட்டிபேதம் பலவிதப்படுமென்பதையும் ஒவ்வோர் சிருட்டிபேதத்தும் நூல்களும் இயல்புகளும் வேறுபாடடையும் என்பதையும் விளங்கிக்கொள்ளுமாற்றல் இவர்மாட்டில்லாமையே குற்றமாம் என்க. "பலவாஞ் சிருட்டி பல வாகமமும், பலவிதமாய்த்தோன்றுமெனப்பார்" சைவசமய நெறி. அமரிக்கரிலொருசாரார் பூமி உருண்டையென்பதைப் பூரணமாகத் தாபிப்பவர்க்குப் பெரும் வெகுமதியளிப்பதாக வெளியிட்டிருக்கிருர்களாமே. ஆண்டு வேண்டுமேல் நான்சாந்தரங் கற்ற ஓர் மாணவனையுந் துணைக்கொடு சென்று அவ்வெகுமதியைப் பெருமல் நம் சோதிடாசிரியர் ஏன் வீண்காலம் போக்குகிருரோ தெரியவில்லை.

(அ) மேல் 'இக்காலம் பாமரசனங்களும் பிழையென்று தாமாகவே கண்டு பிடித்துக் கூறத்தக்க பிழைகளைத் திருத்திவிடுதல் அறிஞர் கடனும்" என்ருர். இவர்போன்ற அறிஞர்களில்லாமையானன்றே நம்நூல்கள் இன்னும் பாமரசனங்களும் பழித்தொதுக்கிவிடற்கேற்ற பிழைகள் நிறைந்தனவாய்க் கிடக்கின்றன. ஆகலின் ஆதிகாலத்தகத்தியமுனிவர் சங்கங்கூட்டியாராய்ந்து தமிழ்மொழியைப் பண்ணுறுத்தியதுபோல இவரும் இராமுப்பிள்ளைபோன்ற நுண்மாணுழைபுலமுடைய அறிஞரை ஓர் சங்கமாகக்கூட்டித் தாமே தலைவராயிருந்து ஆகம புராணுதி நூல்களைப் பண்ணுறுத்திக் கொடுப்பரேல் அஃதுலகிற்கோர் உபகாரமும், இவர்க்கு அழியாப்பெரும்புகழுமாமே. இன்னும் இவர் விஷயங்களை ஆராயப்புகின் அவவின் மிகவிரியுமாதலின பத்திரிகை யிடந்தராதென்றெண்ணி இவ்வியாசத்தை இவ்வளவில் முடிக்கின்றேன்.

நம் சோதிடப் பத்திராசிரியர் சோதிட நூல்களிலும் இவ்வாருசங்கைக் கிடமான விஷயங்கள் பலவிருத்தலை ஆராய்ந்தறிந்திலரோ? மணப் பொருத்தம் பார்ப்பதனுல் வரும் பயனென்னையோ? நுணுகி யாராயப்புகின் அதுவும் பயனற்ற செயலாய் முடியுமே.

இங்ஙனம்,
வி. நடராசன்,
உபாத்தியாயன்,
மீசாலை தெற்கு.

## சைவாசிரியர் சங்கம்.

இச்சங்கமகாசபையின் 2-ம கூட்டம் புங்குடுதீவு சுப்பிரமணிய வித்தியாலயத்தில் இவ்வாண்டு யூலாய் 19-ந் திகதி சனிக்கிழமை சாயந்தரம் 3மணியளவில் கூடியது. அச்சமயம் யாழ்ப்பாணத்தின் பல பாகங்களிலிருந்தும் ஆசிரியர் பலர் வந்து குழுமினர் சபைத்தலைவர் ஸ்ரீமான் சி சுவாமிநாதன் B A அவர்கள் அக்கிராசனம் வகித்தனர். தேவாரபாராயணத்துடன் கூட்டம் ஆரம்பமானது. அக்கிராசனர் புங்குடுதீவு வாசிகள் செய்த வரவேற்பு உபசாரங்களை வியந்து நன்றிகூறிய பின்னர், சங்கத்தின் முன்னேற்றத்தைப்பற்றி ஒரு சிறு சொற்பொழிவு நிகழ்த்தினர். அதன்பின் காரியதரிசியால் சென்ற கூட்டவரலாறு வாசிக்கப்பட்டுச் சபையோரால் அங்கீகரிக்கப்பட்டது.

பின்னர் அக்கிராசனரவர்கள் சைவவித்தியா விருத்திச்சங்க மானேஜர் அவர்களுடன் பிரதிஸ்தர்கள் (Deputation Committee) கலந்து தீர்மானித்த சம்பள அறிக்கையை அவர்கள் வேண்டுகோட்கிணங்கிப் பிரசங்கித்தனர் பின்னர் பின்வரும் தீர்மானங்கள் சபையோரால் தீர்மானிக்கப்பட்டன.

### தீர்மானங்கள்.

1 வித்தியாபகுதியார் வெளியிட்ட பாடத்திட்டத்தில் பாஷை என்னும் பகுதியில் இலக்கண இலக்கியபாகங்கள் வகுப்புக்கேற்றவாறு அமைக்கப்படாமையால் தமிழ்ப்பாஷை எழுதுங்குறைபை நீக்குதற்குச் செய்யவேண்டிய திருத்தங்களை ஆராய்ந்து செய்து அறிவிக்குமாறும சில பாடங்களுக்குத் தமிழ்ப்பாஷையில் தகுந்த புஸ்தகங்கள் இன்மையால் அப்பாடங்களுக்குரிய புஸ்தகங்களை இயற்றுமாறும் தனித்தனி இரண்டு உபசபைகளை ஸ்தாபிக்கவேண்டுமென இச்சங்கம் வேண்டிக் கொள்கிறது.

2 சைவாசிரியர் சங்கத்தால் அனுப்பப்பட்ட பிரதிஸ்தர்களுக்கு, சை வி, வி, சங்க மானேஜர் அவர்கள் வேதன விஷயமாகக் கொடுத்த வாக்கை நிறைவேற்றுதபடியால் யூலாய்மீ 31-ந் திகதிக்கிடையில் மே மாதம் முடிய வுள்ள வேதனத்தை ஆசிரியர் அனைவருக்கும் கொடுக்க வேண்டுமென்றும் அது தவறின் இச்சங்ககாரியதரிசி வித்தியாசங்கத்தார் அவர்களுக்கு இந்த விஷயத்தை அறிவித்து ஆக வேண்டியவற்றை ஒழுங்கு செய்யவேண்டுமென்றும் இச்சங்கம் தீர்மானிக்கிறது

3. யூலாய்மாதம் முடியமுன் மே மாதம் முடிய வுள்ள வேதனத்தைப் பெருத பாடசாலைகளின் தலைமை ஆசிரியர்கள் அதன் விபரத்தை இச்சங்ககாரியதரிசிக்கு ஆகஸ்டு மாதம் 1-ந் திகதி அறிவிக்குமாறு இச்சங்கம் வேண்டிக்கொள்கிறது.

4. சைவவித்தியா விருத்திச் சங்கத்தில் கல்வி கற்பிக்குமாசிரியர் யாராவது சம்பள ஒழுங்கினங் காரணமாக யூலாய்மீ முடிய சங்கத்தினின்றும் விலகுவதாக அறிவித்தல் கொடுத்திருப்பின் அவர்களை இச்சங்கம், அதற்குரிய வழிவகைகளைக் கையாளவிருப்பதால் தமது அறிவித்தலை அழித்துக் கொள்ளும்படி கேட்டுக்கொள்ளுகிறது

5. சைவவித்தியாவிருத்திச் சங்கம் ஆசிரியர்களுக்கு இதுவரையும் ஏறக்குறைய மூன்று மாத வேதனத்தைக் கொடாது விட்டபடியாலும் அதனுல் ஆசிரியர் பலர் கடன்பட்டு வட்டிகொடுக்கவேண்டியிருக்கிறபடியாலும், சை. வி வி. சங்க ஆசிரியர்கள் டிை சங்கத்திற்காகத் தங்கள வேதனத்தில் நன்கொடையாகக் கழித்துவரும் தொகையை சம்பளம் ஒழுங்காகக் கொடுபடுமவரைக்கும் கழியாதிருக்கும்படி இச்சங்கம் டிை சங்க ஆசிரியரனைவரையும் வேண்டிக்கொள்கிறது.

6 தமது வேதனத்தைப் பெற்றுக்கொள்ளாமல் அதற்குரிய பற்றிச் சிட்டைக் கொடுக்கும் வழக்கம் ஆசிரியர் மாட்டிருந்தால் அது அவசியம் தவிர்க்கப்பட வேண்டுமென இச்சங்கம் தீர்மானிக்கிறது

7 இச் சங்கத்தில் தீர்மானிக்கப்பட்ட தீர்மானங்களை, சை வி வி சங்ககாரியதரிசி, மானேஜர் சபாநாயகர் ஆகிய மூவர்க்கும் கடிதமூலமாகவும் ஆசிரியர்கட்கு பத்திரிகை மூலமாகவும் இச் சங்கக் காரியதரிசி அறிவிக்க வேண்டுமென இச சங்கம் தீர்மானிக்கிறது.

இத் தீர்மானங்கள் நிறைவேறியபின் சமயக் கல்வி விருத்தியின் பொருட்டு நியமிக்கப்பட்ட சபையினரால் இயற்றப்பட்ட சமய பாடத்திட்டமும பிரமாணவிதிச் சபையாரால் ஆக்கப்பட்ட உப பிரமாணங்களும் அன்று ஆலோசிப்பதற்குப் போதிய நேரமின்மையால் அடுத்த மகாசபைக் கூட்டத்தில் ஆராயப்படுமெனப்பின் போடப்பட்டன இவ்வளவிற் இக்கூட்டம் பூர்த்தியாக இச்சங்கத்தின் கிளைச்சங்கமாகிய புங்குடுதீவுச் சைவாசிரிய சங்கத்திற்கு ஸ்ரீமான் சி சுவாமிநாதன் B A அவர்கள் அக்கிராசனராயமர வைத்தியர் ஸ்ரீமான் சி கணபதிப்பிள்ளை அவர்கள் "எமது சங்க முன்னணிவேலை" என்னும் பொருள்பற்றி நீண்டதோர் சொற்பொழிவு நிகழ்த்தினர் சபைத் தலைவர் அவ்விஷயசார்பாகச் குறிப்புரைகூறியபின்னர் ஸ்ரீமான் வ. பசுபதிப்பிள்ளை அவர்கள் அக்கிராசனரவர்கட்கு வாழ்த்துரை கூறினர். கூட்டம் 6 மணியளவில் தேவார பாராயணத்துடன் நிறைவேறியது.

பின்னர் இரவு 7 மணிமுதல் 11 மணி வரையும் சங்கீதகாலக்ஷேபம் மிகச்சிறப்பாக நடைபெற்றது

இ இராமலிங்கம்
உப காரியதரிசி.


## ஸம்ஸ்கிருத வித்தியாசாலை விளம்பரம்.

ஸ்ரீ கமலாம்பிகாஸமேத ஸ்ரீ கயிலாசநாதஸ்வாமீ தேவஸ்தான, வேத, ஆகம ஜோதிஷ, காவ்ய, புராண, வித்தியாசாலை" என்னும், நாமத்தையுடைய வித்தியாசாலை யொன்று மேற்படி தேவஸ்தானத்தில் ஸ்தாபிக்கப்பட்டு நிகழும் பிரமோதூதஹு ஆடிமூ க-ந் திகதி தொடக்கம் நடைபெற்று வருகின்றது. இலவசமாக அன்ன வஸ்திரம் பெற்றுக்கொண்டு சேர விரும்புவோர் இந்த மாதம் கூo-ந் திகதி வரையிலும் ஏனையோர் பின்னும் விண்ணப்பப் பத்திரம் அனுப்பலாம். அச்சிட்ட விண்ணப்பப் பத்திரங்கள் மேற்படி வித்தியாசாலை ஸ்தாபகர் ப்ரம்மஸ்ரீ த. வே. கார்த்திகேயக்குருக்கள் (தம்பையாக்குருக்கள்) அவர்களிடம் எழுத்துமூலமாய் அல்லது அவருடைய காரியாலயத்தில் முகாமுகமாய்ப் பெறறதபாலன.

☞ தேரிவுசெய்யப்பட்ட முதல் 12 மாணவர்களுமே இலவசப் போஷணையும் கல்வியும் பெறுவர்.

நல்லூர், 20-7-30
(M. 1 21st to 21-8-30)

## ஜவாஹிருல் முபர்ரா லேகியம்.
### ஒரேவேளையில் பரீட்சை பார்க்கலாம்.

பலமில்லாமல் தளர்ந்து சோர்வடைந்த நரம்புகளையும் உலக வாழ்க்கையில் பிரியமில்லாமல் சஞ்சலப்படும் மனதையும் ஒரே வேளை சேவியம சாப்பிட்ட பிறகு ஆச்சரியப்படும்படி நரம்புகளுக்குப் பலமும் திமிரும் உண்டாகும்.

பரீட்சைக்கும்பலனுக்கும் உத்தரவாதமுள்ள சத்திய அவுஷதம். சொர்ப்பன ஸ்கலிதம, தாரித ஸ்கலிதம, பற்பல வாய்வு ரோகங்கள், இடுப்புவலி, கைகாலசதி, மலச்சிக்கல்பசிமந்தம் தேக காங்கையில் நீற்றுப்போகும் பலஹீனங்கள் முதலிய யாவற்றையும் குணப்படுத்தும் பத்தியமில்லை. உபயோக விபரம் மருந்துடன் வரும். வி. பி வேறு.

20நாள் 40 வேளை டப்பி 1க்கு விலை ரூ 4-00
10நாள் 20வேளை டப்பி 1க்கு விலை ரூ 2-20

மேலே சொல்லப்பட்ட வியாதிகளையும் இதில் சொல்லப்படாத வியாதிகளையும் கண்டிக்கும் அசல் சத்தியவாக்குள்ள (சிட்டுக் குருவி; மாத்திரைகள் 16கொண்ட டப்பி1க்கு விலை ரூபா 5-00. கைகண்ட பலன்.

வி. பி. வேறு.
K V. Vappadurai & Co
Portonovo
S. I.
(M. 78 3—4-8-30)



தங்க மெடல்கள் பெற்ற
ஐரோப்பிய மதுரைக் கம்பனியாரால்
செய்யப்படும்
திறமான குடை அடையாளமுள்ள
## கொழுக்கி ஓடுகள்.

மதுரைக் கம்பனியார் சிறந்த குடை அடையாளமிட்டு இந்த ஓடுகளை வெகு பணிக்கரய் அமைத்திருக்கிருர்கள். வெயில், மழை, நெருப்புக்கு இதிலும் மேலான பாதுகாப்பு உபகரணம் வேறென்றில்லை. பல தொழில் நிபுணரின் பரிசோதனையால் இதன் இயற்கை மெச்சப்பட்டது. இதுவரை 10 தங்க மெடல் பரிசுக்குக் கம்பனியாரைத் தகுதியுடையாராக்கிப் புகழ்பெற்றது. மிக இலேசானது. மலிவானது. ஒவ்வொரு ஓட்டிலும் குடை அடையாளம் விளங்கும். காங்கேசன்துறையிலே வேமாகக் கட்டப்படும் அரசினரின் சுகஸ்தான கட்டடங்களுக்கென இக்குடை அடையாள முள்ள 55,000 ஓடுகள் பாவிக்கப்பட்டிருக்கின்றன.

இந்த இனத்திலே கண்ணுடி ஓடுகளுமுண்டு.

ஜே. செருபிம் அன்ட் பிறதர்.
ஏசண்டர், பெரியதெரு, யாழ்ப்பாணம்
(Y 70. 11-8 30.)

ஒவ்ஸின்! ஒவ்ஸின்!! ஒவ்ஸின்!!!
மிகவிலைகுறைந்தது! நீடித்து உழைக்கக்கூடியது.



## மோட்டர்ரதங்கள் விற்பனை.

ஒஸ்ரின், டொட்ஜ், மசொற்ரே, முதலிய இரதங்கள்; வார்கோ, டொட்ஜ், மொறிஸ் முதலிய பஸ்களும், லொறிகளும்;

டக்லாஸ், ஏ ஜே. எஸ். சாரேலியா மோட்டர்சைக்கிள்களும், சாதாரண சைக்கிள்களும் எம்மிடத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

பாவித்த மோட்டர்ரதங்கள் மாற்றிக் கொடுக்கப்படும். எவ்வித மோட்டார்சாமான்களும் கிடைக்கும்.

கந்தோர்கள்,
(1) இரத்தினபுரி
(2) 11 அவொன்டேல்தெரு, கொழும்பு.
(3) கொட்டடி, யாழ்ப்பாணம்

K. S. இராஜலிங்கம்,
மெசர்ஸ் வாக்கர் சன்ஸ் கம்பெனியின் ஏசன்ட்,
இரத்தினபுரி.

(Y. 1 14 7 30—13-7-31)


வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன், கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள்வாழ்க, நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்விமல்க, மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்.

Printed & published by Pandit V. T. Sambhandan for and on behalf of the Proprietors, the Jaffna Siva Paripalana Sabai, at their Press the Saiva Prakasa Press, Vannarponnai.